முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி

நாள்: 10.11.2025 அ.வ.எண். 76/2012, வா.சா.1, சண்முகம், த/பெ. அய்யாசாமி

வாதி , 3 ம் பிரதிவாதி ஆஜர்.

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

1) நான் தாக்கல் செய்துள்ள வா சா ஆ 1 ன் படி 3 ஏக்கர் பூமி சொத்து விவரத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பூமிக்கான சிட்டா தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். சிட்டாபடி எவ்வளவு விஸ்தீரணம் கொண்ட பூமி பாத்தியதை என்றால் 4 1/2 ஏக்கர் ஆகும். வா சா ஆ 2 ஆவணமானது மேற்படி பூமிக்கான சிட்டா என்றால் சரிதான். 1 1/2 ஏக்கர் எனக்கு எந்த வகையில்கிடைத்தது என்றால் எனது தாத்தா கிரயம் வாங்கிய வகையில் வந்ததாகும். அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2) மேற்படி 2 பத்திரங்களும் ஒரே காலையைச் சேர்ந்தது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புலவரைபடம் க.ச.எண்.96 ற்கான முழு புல வரைபடம் என்றால் சரிதான். **மேற்படி புல வரைபடம் பி வா சா ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வரைபடத்தில் 96/2 ஆக காட்டப்பட்டுள்ளது எனது பூமி என்றால் சரிதான். 4 1/2 ஏக்கர் பூமிக்கு எந்த பகுதியில் ரோடு உள்ளது என்றால் மேற்குப்பக்கம் உள்ள பள்ளத்தை தாண்டி செல்கிறது. பள்ளமானது பஞ்சாயத்தை சேர்ந்தது என்றால் சரிதான். மேற்புறம் செல்லும் தார் ரோடு எவ்வளவு அகலம் கொண்டது என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. சுமார் 500 அடி இருக்கும் என்றால் தெரியவில்லை. மேற்படி தார் ரோட்டில் பஸ் செல்கிறது என்றால் சரிதான். அந்த தார் ரோடு 300 அடி நீளத்திற்கு இருக்கும் என்றால் இருக்கலாம்.

3) மேற்படி ரோட்டின் வழியாக எத்தனை பஸ் செல்கிறது என்றால் தெரியாது. பஸ் செல்லும் விவரம் தெரியும் என்றும் வழக்கிற்காக தெரியாது

ஒப்பம்/−(R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் பிரதிவாதியின் தகப்பனார் பெயரில் உள்ளது. மேற்படி பட்டாவில் க.ச.எண். 242/3 ன் 4 புற எல்லையின் அளவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டாப்படி பிரதிவாதியின் தகப்பனாருக்கு 250 ச.மீ பாத்தியம் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். பட்டாவில் என்ன வகை வீடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இடிந்த வீடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் அது போன்ற வீடே கிடையாது.

4) என்னிடம் காட்டப்படுவது நத்தம் நிலவரித்திட்ட தூய அடங்கல் பதிவேடு என்றால் சரிதான். **மேற்படி நத்தம் நிலவரித்திட்ட தூய அடங்கல் பதிவேடு பி வா சா ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது (உண்மை நகல் –5 பக்கங்கள்).** பி வா சா ஆ 2 ன் 4 வது பக்கத்தில் 12 வது காலத்தில் யார் பெயர் வருகிறது என்றால் 2, 3 பிரதிவாதிகளின் தகப்பனார் பெயர் உள்ளது. அதில் 250 ச.மீ என்று குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பி வா சா ஆ 2 ல் வகை இடிந்த வீடு என்று கண்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் 3 தலைமுறையாக அதன் வழியாகத்தான் நடந்து வருகிறோம். அது போன்று ஒரு வீடே கிடையாது.

5) 2, 3 பிரதிவாதிகளின் தகப்பனார் உயிருடன் இருந்த போது 2 ம் பிரதிவாதிக்கு 2008 ம் ஆண்டில் செட்டில்மெண்ட் எழுதிவைத்தார் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு மேற்படி விவரம் தெரியும் என்றும் வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புல வரைபடம் 243 காலைக்கானது என்றால் சரிதான். **மேற்படி புல வரைபடம் பி வா சா ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது** . மேற்படி புல வரைபடத்தில் க.ச.எண். 243/12 வருகிறது என்றால் சரிதான். வா சா ஆ 4 நத்தம் பட்டாவில் க.ச.எண்.

ஒப்பம்/–(R.சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.
பொள்ளாச்சி.

243/12 என்றுள்ளது என்றால் சரிதான். அதில் வகைப்பாடு என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ரயத்துவாரி மனை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

6) வா சா ஆ 4 ல் எத்தனை ஏர்ஸ் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 2.50 ஏர்ஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் கடைசி காலத்தில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இடிந்த வீடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வருவாய்துறை ஆவணத்திலும், கிராம ஆவணத்திலும் தாவாவில் குறிப்பிட்டுள்ள 2 வது அட்டவணை சொத்து வழித்தடம் எதுவும் கிடையாது என்றால் சரியல்ல. 2 வது அட்டவணை சொத்து முழுவதும் 2 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும் அதை நான் உடைத்து தடம் ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் சரியல்ல. அவர்கள் தான் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். எங்களுடைய அனுபவத்தில் உள்ள பூமியை ஆக்கிரமிப்பு செய்வதற்காகவே எங்களுக்கு தெரியாமல் எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து பேரில் பட்டா பெற்றுவிட்டார்கள்.

7) எங்களுடைய தோப்பிற்கு செல்வதற்கு தார் ரோடு உள்ளது என்றும் அதை மறைத்து 2 வது அட்டவணை சொத்து தான் தடம் என்று பொய்யாக கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி சொத்திற்கு எந்தவித ஆவணமும் இல்லை என்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதியின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்று இந்த தாவா தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் எங்களுக்கு வேறு தடம் உள்ளது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையரிடம் வேண்டுமென்றே தார் ரோட்டை காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல.

ஒப்பம்/-(R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.

பொள்ளாச்சி.